2009 ஜுலை 21] [திரு. கு.ந. சேகரன்]

அப்பொழுது அந்த பாய்லர் திடீரென்று வெடித்துச் சிதறியது. பாய்லர் வெடித்துச் சிதறிய காரணத்தால் அங்கே பணியாற்றிக் கொண்டிருந்த சரவணன், ராஜேஷ், ஜான் கென்னடி என்கிற அந்த மூவரும் உடல் சிதறி சுமார் 200 அடிகளுக்கு அப்பால் தூக்கி வீசப்பட்டு, மிகப் பரிதாபமாக, கொடூரமாக இறந்துவிட்டார்கள். சலீம் மற்றும் செந்தில் குமார் ஆகிய இருவரும் படுகாயம் அடைந்திருக்கிறார்கள். விபத்தில் பாதிக்கப்பட்ட, இறந்த அனைவருமே ஏழைக் குடும்பத்தினர். பாதிக்கப்பட்டவர்களுடைய குடும்பத்திற்கு இழப்பீடு வழங்குவதோடு, அந்த ஆலையிலேயிருந்து வெளியேறுகின்ற எரிசாராயக் கழிவுகள், அருகிலே ஓடுகின்ற உய்யக்கொண்டான் கால்வாயிலே விடப்படுகின்ற காரணத்தால், அந்தப் பகுதியில் இருக்கின்ற நீர் நிலைகளெல்லாம் மாசுபட்டு, மேற்பரப்பு நீரும், காற்றும், நிலத்தடி நீரும் மாசுபட்டு, விவசாயிகளுக்கும், பயிர்களுக்கும் மிகப் பெரிய பாதிப்பை அது ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே, . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சேகரன், விஷயத்தை மட்டும் சொல்லுங்கள்.

திரு. கு.ந. சேகரன்: ஆகவே, அந்த ஆலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்து இறந்தவர்களின் குடும்பத்திற்கு உரிய இழப்பீட்டை வழங்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

(ஐ) வேலூர் மாவட்டத்தைப் பிரித்து, திருப்பத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நிருவாக வசதிக்காக பல்வேறு மாவட்டங்களைப் பிரித்திருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், சமீபத்திலேகூட ஆம்பூர் தாலுகாவை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பெரிய மாவட்டங்களாக இருக்கிற வேலூர், விழுப்புரம், சேலம் மாவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்றும், குறிப்பாக, வேலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, திருப்பத்தூரை தலைநகரமாகக் கொள்ள வேண்டுமென்கிற கோரிக்கை நீண்டகாலமாக இருக்கிறது.

திருப்பத்தூர் மிக, மிக பின்தங்கிய பகுதி. வேலூர் மாவட்டத்தைப் பிரித்து எங்கள் பகுதியைப் புதிய மாவட்டம் ஆக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது அவசர முக்கியத்துவம் வாய்ந்தது இல்லை.

(ஒ) ஊத்தங்கரை வட்டம், காட்டு யானையால் தாக்கப்பட்டவருக்கு நிதியுதவி மற்றும் பயிர்ச் சேத இழப்பீடு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 18 ஆம் தேதி, எனது ஊத்தங்கரை தாலுகா அருகே யானை மிதித்து ஒரு வனக் காப்பாளர் இறந்து விட்டார். உடனடியாக அந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களை அனுப்பி வைத்து, ஈமச்சடங்கு உள்ளிட்ட பல்வேறு விஷயங்களுக்கு உடனே உதவி புரிந்ததற்கு மாவட்டத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏறக்குறைய ஒரு வாரகாலமாக, இன்றுவரையிலும், 300, 400 ஏக்கரில் பயிர் சேதமாகி இருக்கின்றது. யானையினுடைய துதிக்கையால் தாக்கப்பட்டு, உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிற ஒருவருக்கு இன்னும் எந்தவிதமான உதவியும் அளிக்கப்படவில்லை. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும், பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய பயிர்களுக்கு உரிய நஷ்ட ஈடுவழங்குவதற்கும், அதேபோல், உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கக்கூடிய பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்திற்கு உதவி செய்வதற்கும் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

(ஓ) முகையூர் தொகுதி, மனம்பூண்டியில் மாற்றுப் பாலம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.